மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

" மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 76,11,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். "

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

8. பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் வாழ்த்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைவருக்கும் ஒரு வாழ்த்து.

பாட்டாலே புரட்சி செய்து சமுதா யத்தைத்
தலைகீழாய்ப் புரட்டிவைத்துத் தொண்டு செய்த
பாட்டாளி பாவேந்தர் பிறந்த நாளில்
பைந்தமிழர் மேன்மையுற வாழ்த்து கின்றேன்.
கேட்டால்தான் கிடைக்குமெனக் கிளர்ந்தெ ழுந்து
சிரமிழந்து குருதிசிந்தி வாழ்வி ழந்த
பாட்டாளி மக்களினம் நினைத்துப் போற்றிப்
பார்புகழும் மே நாளில் வாழ்த்து கின்றேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, செவ்வாய்க்கிழமை (2—5—1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

108. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் (1986-87-ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம். 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது),

109. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

1989 ஏப்ரல் 29]

110. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

111. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

112. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் [1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

* 140. கோரிக்கை எண். 31—ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

* 141. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை குறித்த செயலாக்கத் திட்டம், 1989–90 (ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS